23.09.2022

அசல் வழக்கு எண். 937-2017

வாசா.1 தெய்வசிகாமணி

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

எனது சொத்து அரசூர் கிராமத்தில் 194ம் நெம்பர் சர்வேயில் உள்ளது. உட்பிரிவு எண் நினைவில்லை. நான் தாவா சொத்தை 1977ல் நடராஜனிடமிருந்து கிரையம் பெற்றேன். அப்போது உட்பிரிவு செய்யப்படவில்லை. மேற்படி 194 நெம்பர் சர்வேயில் மொத்தம் 18 ஏக்கரா. நான் அதில் 4 ஏக்கர் 42-1/2 செண்ட் கிரையம் பெற்றோம். எனது அண்ணனுடன் கூட்டாக கிரையம் பெற்றேன். அதன்பின்னிட்டு நானும் என் சகோதரரும் பத்திரங்கள் மூலம் பாகப்பிரிவினை எதுவும் செய்து கொள்ளவில்லை. எனது சகோதரர் பழனிச்சாமி 2009ல் இறந்துவிட்டார். அவர் இறப்பதற்கு முன்பு அவரது மகனுக்கு வாசாஆ.18ன் மூலம் அவரது சொத்துக்களை பாத்தியப்படுத்தியுள்ளார். எனது சகோதரர் 2004ம் ஆண்டு வாக்கில் மேற்படி உயில் ஆவணத்தை எழுதிவைத்தார். அவர் உயில் ஆவணம் எழுதி வைப்பதற்கு முன்பாக என்னிடம் சொன்னார்.

2004ல் உயில் ஆவணம் எழுதி வைக்கும் போது எங்களுக்குள் மன வருத்தம் எதுவும் இல்லை. நான்1977ல் கிரையம் பெற்ற பின்னிட்டு 2004ல் வாசாஆ.18 ஏற்படுத்தும் காலத்தில் உட்பிரிவு எண் எதுவும் குறிப்பிட்டு வாசாஆ.18ல் எழுதப்பட்டதா என்றால் உட்பிரிவு எண் குறிப்பிடப்படவில்லை. அதற்கு பின்னிட்டாவது எனது சொத்து எந்த நெம்பரில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பிரதிவாதி எப்போது மில் கட்டுவதற்காக சொத்து கிரையம் பெற்றார் என்றால் 2005ம் வருடம் இருக்கும். பிரதிவாதி அவரது சொத்தை வாசாஆ.17க்கு கிரையம் பெறும் போது உட்பிரிவு செய்து சொத்தை எழுதியுள்ளார் என்றும் அது தெரிந்த பின்னிட்டாவது எங்களது சொத்திற்கு என்ன உட்பிரிவு என்று நாங்கள் தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்யும் போது உட்பிரிவு பற்றி நாங்கள் பார்க்கவில்லை. எனது சொத்து மந்தை புறம்போக்கிற்கு

வடக்கே உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் சர்வேயருடன் சொத்தை அளவீடு செய்யும் பொழுது என்னுடைய சொத்தின் உட்பிரிவானது 194/5,6,7,8 என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எனது பூமிக்கு மேல்புறம் பிரதிவாதியின் பூமியுள்ளது. எனது பூமிக்கு வடபுறம் மற்றும் கீழ்புறம் மற்றும் மேல்புறம் பிரதிவாதிகள் பூமி தான் உள்ளது. சர்வே 194/4ல் 1 ஏக்கர் 48 செண்ட் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

அவர்கள் கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு அதில் கம்பி வேலி அமைத்துள்ளனர் என்றால் ஆக்கிரமிப்பு செய்து வேலி அமைத்துள்ளனர். அவர்கள் கம்பி வேலி போட்டுள்ளது எங்கள் பூமிக்கு வடபுறம் எங்களது பூமியையும் சேர்த்து கம்பி வேலி அமைத்துள்ளனர். அதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து குற்ற வழக்கு முகாந்திரம் இல்லை என முடித்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். நான் அந்த வழக்கை மேல் நடத்த மனு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.194/4 பிரதிவாதி முறையாக அவர்களது முன்பாத்தியஸ்தர்களிடமிருந்து கிரையம் பெற்றது என்றும் அதில் எங்களுக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய்யான தகவல்கள் சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் பிரதிவாதிகள் அவர்கள் கிரையம் பெற்ற பூமிக்குள் தான் உட்பிரிவுடன் முறையாக கம்பி வேலி அமைத்துள்ளனர் என்றும் எனது இடத்தை ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

sd/தெய்வசிகாமணி

Taken down by me to open Court read over to the witness and acknowledged by her to be corrected

N RENUGA

Digitally signed by N RENUGA
Date: 2022.09.23 17:48:01 +0530

District Munsif
**Sulur**